அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 4

| | |
|---|---|
| **நேரம்:** 120 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்:** 03.06.2023 | **பக்கங்கள்:** 12 |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. உயிர்க் குறில் எழுத்துகளின் எண்ணிக்கை

☐ 7 ☐ 3 ☐ 5

2. ஆனைந்து பொருள்களுள் ஒன்று

☐ தயிர் ☐ பழச்சாறு ☐ தண்ணீர்

3. நீ வீணையை மீட்டு. நீங்கள் வீணையை

☐ மீட்டுவார்கள் ☐ மீட்டுங்கள் ☐ மீட்டினான்

4. மகிழ்ச்சி என்பதன் ஒத்தபொருட் சொல்

☐ களிப்பு ☐ துன்பம் ☐ கவலை

5. கதிரொளி என்பதைப் பிரித்து எழுதினால்

☐ கதி + ரொளி ☐ கதிர் + ஒளி ☐ கதிரி + ஒளி

6. எமது தாய்நாட்டுக்காக வீரச்சாவு அடைந்தோர்

☐ செல்வந்தர்கள் ☐ புலவர்கள் ☐ மாவீரர்கள்

7. குளிர்கால விளையாட்டுகளுள் ஒன்று

☐ கிளித்தட்டு ☐ துடுப்பாட்டம் ☐ பனிச்சறுக்கல்

8. ஒரு வீட்டுக்கு இரண்டு வாசற்படி. அது

☐ கழுத்து ☐ மூக்கு ☐ முகம்

9. மாலை + காட்சி என்பதனைச் சேர்த்து எழுதினால்

☐ மாலைகாட்சி ☐ மாலைய்காட்சி ☐ மாலைக்காட்சி

10. வீரர்கள் பயன்படுத்துவது

☐ வால் ☐ வாழ் ☐ வாள்

11. நிக்குது என்பதன் எழுத்து வழக்கு

☐ நிக்கிறது ☐ நிற்குது ☐ நிற்கிறது

12. முல்லை நிலத்தின் சிறப்பான இசைக்கருவி

☐ குழல் ☐ வீணை ☐ ஏழில்

13. மாணவனுக்கு மாணவி போல தோழனுக்கு

☐ அரசி ☐ தாய் ☐ தோழி

14. ஈழத்தின் நீளமான ஆறு

☐ மாவலி ☐ நயாகரா ☐ நைல்

15. பாக்கு துவர்க்கும். அது போல மிளகாய்

☐ உறைக்கும் ☐ உவர்க்கும் ☐ கசக்கும்

(15 X 1 = 15 புள்ளிகள்)

**2. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.**

1. ஆபிரகாம் இலிங்கன் அமெரிக்க ______________________ தலைவர் ஆனார்.
   (நாட்டை / நாட்டின்)

2. நாம் ____________________________ இருந்து அமைதியாகப் படிக்கலாம்.
   (நூலகத்தில் / நூலகத்துக்கு)

3. திருக்கோணேச்சுரம் கோவில் __________________________ மீளக் கட்டப்பட்டது.
   (குளக்கோட்டனை / குளக்கோட்டனால்)

4. தமிழில் பல அறநூல்கள் உள்ளன. __________________________ திருக்குறள் முதன்மையானது.
   (அவற்றுள் / ஒவ்வொன்றும்)

5. நான் வீட்டுக்கு ஓடினேன். __________________________ கல்லில் தடுக்கி விழுந்தேன்.
   (இப்பொழுது / அப்பொழுது)

6. நாங்கள் __________________________ அழிக்காமல் பேணுவோம்.
   (காடுகளை / காடுகளுக்கு)

(6 X 1 = 6 புள்ளிகள்)

3. தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

| ஆங்கிலம்: | யேர்மனி: | நோர்வே: |
|---|---|---|
| 1. Sky | 1. Himmel | 1. Himmel |
| 2. Teacher | 2. Lehrer | 2. Lærer |
| 3. Flowers | 3. Blumen | 3. Blomster |
| 4. Umbrella | 4. Regenschirm | 4. Paraply |
| 5. White | 5. Weiß | 5. Hvit |
| 6. Horse | 6. Pferd | 6. Hest |

| இத்தாலி: | நெதர்லாந்து: | டென்மார்க்: |
|---|---|---|
| 1. Cielo | 1. Hemel | 1. Himmel |
| 2. Insegnante | 2. leraar | 2. Lærer |
| 3. Fiori | 3. bloemen | 3. Blomster |
| 4. Ombrello | 4. paraplu | 4. Paraply |
| 5. Bianco | 5. wit | 5. Hvid |
| 6. Cavallo | 6. paard | 6. Hest |

| சுவீடன்: | பின்லாந்து: | தமிழ்: |
|---|---|---|
| 1. Himmel | 1. Taivas | 1. ______________________ |
| 2. Lärare | 2. Opettaja | 2. ______________________ |
| 3. Blommor | 3. Kukat | 3. ______________________ |
| 4. Korg | 4. Sateenvarjo | 4. ______________________ |
| 5. Vit | 5. Valkoinen | 5. ______________________ |
| 6. Häst | 6. Hevonen | 6. ______________________ |

(6 X 1 = 6 புள்ளிகள்)

**4. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| உயர உயர | சிரித்துச்சிரித்து | சலசல |
| கமகம | நல்ல நல்ல | மளமள |

1. பட்டங்கள் ________________________ப் பறந்தன.

2. செழியன் வீட்டுப்பாடங்களை ________________________ எனச் செய்தான்.

3. நண்பர்கள் நகைச்சுவையைக் கேட்டுச் ________________________ மகிழ்ந்தனர்.

4. ஆற்றுநீர் ________________________ என ஓடியது.

5. மல்லிகைப்பூ ____________________ என மணம் வீசியது.

6. நாம் ________________________ நூல்களைத் தேடிக் கற்போம்.

(6 X 1 = 6 புள்ளிகள்)

**5. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.**

1. தாயகத்துக்குச் / நான் / செல்ல / விரும்புகிறேன்

______________________________________________

2. தருகின்றன / பயன் / மரங்கள் / மாந்தருக்குப்

______________________________________________

3. இரண்டு / புறாமலையில் / உள்ளன / தீவுகள்

______________________________________________

4. என்னைப் / தமிழ்ப்பள்ளி / பாராட்டினார் / ஆசிரியர்

______________________________________________

5. ஆழம் / விடாதே / காலை / அறியாமல்

______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

## 6. வினாக்களுக்கு விடை எழுதுக.

1. யாழ் பற்றிய செய்திகளைக் கூறும் நூல் எது?

___________________________________________

___________________________________________

2. தாயகத்தில் எரிக்கப்பட்ட தமிழருடைய நூலகம் எது?

___________________________________________

___________________________________________

3. முற்காலத்தில் மக்கள் செய்திகளை அறிவிக்கப் பயன்படுத்திய இசைக்கருவி எது?

___________________________________________

___________________________________________

4. உயர்திணைச் சொற்கள் இரண்டு எழுதுக.

___________________________________________

5. ஒருமை, பன்மை என்பவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

ஒருமை: ____________________ பன்மை: ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**7. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி ஆறு (6) சொல்லியங்கள் எழுதுக.**

1. திருகோணமலை
2. ஆடிப்பிறப்பு
3. எனது பெற்றோர்

(6 X 2 = 12 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

நாம் பலவகையான பழங்களை உண்கிறோம். அவற்றுள் ஒன்று வாழைப்பழம். அது எல்லாக் காலங்களிலும் கிடைக்கும். வாழையில் பல இனங்கள் உண்டு. கதலி, கப்பல், இரதை என்பன அவற்றுள் சில. வாழைமரத்தின் எல்லாப் பகுதிகளையும் நாம் பயன்படுத்துகிறோம். வாழைக்காய் கறி சமைக்க உதவுகிறது. வாழையிலையில் உணவு உண்பது தமிழர் பண்பாடு. வாழைக்காய்கள் பல சேர்ந்து சீப்பாக இருக்கும். பல சீப்புகள் சேர்ந்து இருக்கும்போது அதை வாழைக்குலை என்கிறோம். வாழை மரங்கள் சுற்றாடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்கும். எங்கள் தாயகத்தில் வாழை மரங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

1. வாழைக்காய் எதற்கு உதவுகிறது?

______________________________

______________________________

2. வாழைக்காய்கள் பல சேர்ந்து எப்படி இருக்கும்?

______________________________

______________________________

3. வாழையிலையில் உணவு உண்பது யாருடைய பண்பாடு?

______________________________

______________________________

4. வாழையினங்கள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

5. வாழைமரம் எதைக் குளிர்ச்சியாக வைத்திருக்கும்?

______________________________

______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள அறிவித்தலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

**தாய்மொழி நாளுக்கான பேச்சுப் போட்டி - 2024**

**போட்டி நடைபெறும் நாள்:** 21 பெப்ரவரி 2024

**நேரம்:** 14:00 மணி

**இடம்:** இசைப்பிரியா கலைப்பள்ளி மண்டபம், பின்லாந்து

**தலைப்பு:** தாய்மொழி நாள்

**போட்டிக்கான பிரிவுகள்:** கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு

**மேலதிக விபரங்களுக்கு:** 00358 8900 1678900

1. பேச்சுப் போட்டிக்கான தலைப்பு தாய்மொழி நாள். (  )
2. இப்போட்டி இத்தாலியில் நடைபெறவுள்ளது. (  )
3. இப்போட்டி 14:00 மணிக்கு நடைபெறும். (  )
4. போட்டிக்கான பிரிவுகளுள் ஒன்று கீழ்ப்பிரிவு. (  )
5. இப்பேச்சுப்போட்டி முத்தமிழ் விழாவுக்காக நடத்தப்படுகிறது. (  )

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 12 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |